International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# 'ஓரிதழ்பூ' சிறுகதையில் வெளிப்படும் பாத்திரப்படைப்பு

**வா.ஞானவள்ளி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் எ.சூசான் மரி நெப்போலியன்**
இணைப் பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம் -605 602

**ஆய்வு சுருக்கம்**

சிறுகதையின் வெற்றிக்கு அதன் கதைக்கருவைப் போலவே பாத்திரப்படைப்பும் முக்கியமானதாக அமைகிறது. ஒரு கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அவர்களின் மனவுணர்வுகள், செயல்பாடுகள், உறவுகள், வாழ்வியல் பின்னணிகள் ஆகியவற்றை ஆழமாகப் பதிவு செய்வதன் மூலம் சிறுகதை வாசகனிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவ்வகையில் 'ஓரிதழ்பூ' சிறுகதையில் ராசாத்தி, தனபாக்கியம் ஆகிய இரு பாத்திரங்களும் கதையின் மையத்தைத் தாங்கி நிற்கின்றன. தந்தையை இழந்த ராசாத்தியின் மனத்தில் உருவாகும் வெற்றிடமும், அவளுடைய தாயான தனபாக்கியத்தின் அன்பும் பொறுப்பும் கதையின் உணர்வுத் தளத்தை உருவாக்குகின்றன.

ராசாத்தி நீர்ப்பரப்பில் காணும் ஓரிதழ்பூவைத் தன்னுடைய உயிரோடு தொடர்புடைய ஒன்றாகக் கருதுகிறாள். அந்தப் பூவின் தோற்றம், மலர்ச்சி, பிரிவு, அழிவு ஆகிய அனைத்தும் அவளுடைய வாழ்க்கை உணர்வுகளோடு இணைகின்றன. அதேபோல், கணவனை இழந்த தனபாக்கியம், மகளைத் தனக்குக் கிடைத்த ஒரே உறவாகக் கருதி வாழ்கிறாள். எனவே இக்கதையில் பாத்திரப்படைப்பு என்பது வெறும் குணநலன் சித்திரிப்பாக இல்லாமல், அன்பு, இழப்பு, தாய்மை, குழந்தை மனம், நினைவு, ஏக்கம் ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இக்கட்டுரை ராசாத்தி மற்றும் தனபாக்கியம் ஆகிய பாத்திரங்களை மையமாகக் கொண்டு 'ஓரிதழ்பூ' சிறுகதையின் பாத்திரப்படைப்புத் தன்மையை ஆராய்கிறது.

**முதன்மைச் சொற்கள்**

ஓரிதழ்பூ, ராசாத்தி, தனபாக்கியம், தாய்மை, அன்பு,

## முன்னுரை

சிறுகதை என்பது குறைந்த அளவிலான நிகழ்வுகளுக்குள் ஆழமான வாழ்க்கை உண்மைகளைப் பதிவு செய்யும் இலக்கிய வடிவமாகும். சிறுகதையின் கதைமாந்தர்கள் அதிக எண்ணிக்கையில் இடம்பெற வேண்டிய அவசியம் இல்லை. மாறாக, குறைந்த எண்ணிக்கையிலான பாத்திரங்களின் வழியாகவே மனிதவாழ்வின் பல்வேறு உணர்வுகளையும் சிக்கல்களையும் வெளிப்படுத்த முடியும். ஒரு பாத்திரம் எவ்வாறு சிந்திக்கிறது, எவ்வாறு செயல்படுகிறது, எதைக் கண்டு மகிழ்கிறது, எதனால் துயரமடைகிறது, பிறருடன் எவ்வாறு உறவு கொள்கிறது என்பவற்றின் வழியாக அப்பாத்திரத்தின் தன்மை வெளிப்படுகிறது.

'ஓரிதழ்பூ' சிறுகதை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. கதையில் நிகழ்வுகள்

மிகக் குறைவாக இருந்தாலும், ராசாத்தி மற்றும் தனபாக்கியம் ஆகிய இரு பெண்களின் வாழ்வியல் உணர்வுகள் விரிவாகச் சித்திரிக்கப்படுகின்றன. குறிப்பாக, ராசாத்தி காணும் ஓரிதழ்பூ அவளுடைய மன உலகத்திற்கும், அவள் இழந்த தந்தையின் நினைவுக்கும், அவளது அன்புக்கும் குறியீடாக அமைகிறது.

ராசாத்தி குழந்தை மனம் கொண்டவள். அவளுடைய மகிழ்ச்சியும் துயரமும் நேரடி யாக வெளிப்படுகின்றன. அதே நேரத்தில், தந்தையை இழந்த துயரத்தையும் அவள் உள்ளுக்குள் சுமந்து கொண்டிருக்கிறாள். அவளது தாயான தனபாக்கியம் கணவனை இழந்த நிலையிலும், மகளைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பெண்ணாகக் காட்டப்படுகிறாள். இவ்விரு பாத்திரங்களின் உறவின் வழியாகத் தாய்மை, மகளின் பாசம், தந்தையின் நினைவு, இழப் பின் வலி ஆகியவை வெளிப்படுகின்றன.

### ராசாத்தி - குழந்தை மனத்தின் பிரதிநிதி

'ஓரிதழ்பூ' சிறுகதையின் முதன்மைப் பாத்திர மாக ராசாத்தி விளங்குகிறாள். கதையின் பெரும்பாலான உணர்வுகளும் அவளுடைய மனநிலையைச் சுற்றியே இயங்குகின்றன. ஓரிதழ்பூவைப் பார்த்தவுடன் அவளுக்குள் ஏற்படும் மகிழ்ச்சியின் வழியாக அவளுடைய குழந்தை மனம் முதலில் வெளிப்படுத்தப் படுகிறது.

**"மனசு சந்தோஷத்தால் நிலைகொள்ளவில்லை"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 100)

என்ற வரி ராசாத்தியின் அளவற்ற மகிழ்ச்சியை மிக இயல்பாக வெளிப்படுத்து கிறது. மேலும், அவள் வாசலுக்கும் உள்ளுக்குமாகத் துள்ளிக் குதித்து ஓடுவதும் வருவதுமாக இருக்கிறாள் என்று குறிப்பிடப் படுவது அவளுடைய குழந்தைத்தனமான உற்சாகத்தை எடுத்துக்காட்டுகிறது.

ராசாத்தியின் மகிழ்ச்சி வெளிப்புறச் செயல் களில் மட்டும் அல்லாமல், அவளுடைய உடல்மொழியிலும் வெளிப்படுகிறது. பூவைப் பார்த்தவுடன் அவளுடைய மனமும் உடலும் மகிழ்ச்சியால் நிறைகின்றன. இதன் மூலம் எழுத்தாளர் குழந்தையின் மனநிலையை இயல்பான காட்சிப்படுத்தலின் வழியாகப் பதிவு செய்கிறார்.

### ஓரிதழ்பூவுடன் ராசாத்திக்கு ஏற்படும் உணர்வுப்பிணைப்பு

ராசாத்தியின் பாத்திரப்படைப்பில் மிக முக்கியமான அம்சம் அவளுக்கும் ஓரிதழ்பூவுக்கும் உருவாகும் உறவாகும். ஆரம்பத்தில் ஒரு சாதாரண மலராகத் தோன்றும் அந்தப் பூ, ராசாத்தியின் மனத்தில் மிகப்பெரிய இடத்தைப் பெறுகிறது. இங்கு ஓரிதழ்பூவின் மீது அவள் காட்டும் அக்கறை, உண்மையில் தந்தையின் மீது அவள் கொண்டிருந்த அன்பின் தொடர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. தந்தையை இழந்த குழந்தை, அவளுக்குள் இருக்கும் பாசத்தை வேறு ஒன்றின் மீது செலுத்துகிறாள். எனவே பூ அவளுடைய மனவுலகில் ஒரு உயிருள்ள பாத்திரமாக மாறுகிறது.

**"ராசாத்தியின் மனசெல்லாம் அந்தப் பூவைச் சுற்றியே வட்டமிட்டது"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 101)

இந்த வரி ராசாத்தியின் மனநிலையை மிகத் தெளிவாகச் சுட்டுகிறது. அவளுடைய சிந்தனையின் மையமாக அந்தப் பூ மாறிவிட்டது.

### தந்தையின் நினைவுடன் இணையும் ராசாத்தியின் பாத்திரம்

ராசாத்தியின் பாத்திரப்படைப்பை முழுமை யாகப் புரிந்துகொள்ள அவளுடைய தந்தை மீதான அன்பை அறிந்துகொள்ள வேண்டும். தந்தையை இழந்த குழந்தையாக அவள் வாழ்கிறாள். தந்தையின் அன்பு அவளுடைய மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

**"அப்பாவின் உதடுகள் அவள் பிஞ்சுக் கைகளை வருடி முத்தமிடுமே... தோளில் தலைசாய்த்துத் தூங்குமே ... நோய்க் கண்டுவிட்டால் இரவெல்லாம் விழித்துப் பணிவிடை செய்வாரே... தன் பசி ஒளித்து அவள் பசியாற்றுவாரே"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 102)

இவ்வரிகளின் வழியாக ராசாத்தி தந்தையை வெறும் குடும்ப உறுப்பினராக அல்லாமல், தன்னை முழுமையாக நேசித்த பாதுகாப்பான உலகமாகக் கருதுகிறாள் என்பதை அறிய முடிகிறது. தந்தையின் மறைவு அவளுடைய மனத்தில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால், 'அப்பாவைப் போல் மலர்ந்த அந்தப் பூவை இழந்துவிடக் கூடாது' என்று அவள் எண்ணுவது இயல்பான மனவியல் வெளிப்பாடாக அமைகிறது. பூவை இழப்பது அவளுக்கு இன்னொரு முறை தந்தையை இழப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

### தாயின் மீது பாசம் கொண்ட ராசாத்தி

ராசாத்தியின் மனதில் தந்தையின் இடம் மிக ஆழமானதாக இருந்தாலும், தாயின் மீது அவளுக்கு அன்பு இல்லை என்று கூற முடியாது. மாறாக, தாயின் மீது அவளுக்குப் பாசம் இருப்பதை கதையாசிரியர் தெளிவாகக்

காட்டுகிறார்.

**"இருந்தாலும் அம்மா தனபாக்கியத்தின் மீதும் பாசம் இருக்கத்தான் செய்கிறது"**

(செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 102)

இவ்வாறு ராசாத்தியின் பாத்திரம் ஒரே பரிமாணத்தில் காட்டப்படவில்லை. தந்தையை நேசிக்கும் மகளாகவும், தாயைப் பாசத்துடன் அணுகும் மகளாகவும், பூவை உயிரினமாகக் கருதி நேசிக்கும் குழந்தையாகவும் அவள் பல பரிமாணங்களில் சித்திரிக்கப்படுகிறாள். இதனால் ராசாத்தியின் பாத்திரப்படைப்பு இயல்பானதும் உளவியல் அடிப்படையிலா னதுமாகிறது.

**பூவைப் பாதுகாக்கும் ராசாத்தியின் மனநிலை**

ராசாத்தியின் பாத்திரத்தில் அன்பின் உச்ச நிலை பூவைப் பாதுகாக்கும் முயற்சியில் வெளிப்படுகிறது. அவளுடைய தாய் தன பாக்கியம் அறியாமையால் பூவை வேரோடு பிடுங்கியபோது, ராசாத்தி அதனைத் தடுக்கிறாள்.

**"ராசாத்தி ஆக்ரோஷம் பொங்கி ஓடி, அம்மாவைத் தடுத்துக் கொண்டாள்"**

(செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 100)

இதில் அவளுடைய கோபம் வெறும் கோப மல்ல. தன்னுடைய உயிருக்கு நெருக்கமான ஒன்றைப்பாதுகாக்க வேண்டும் என்ற அன்பின் வெளிப்பாடாகும். அதனால் அவளுடைய கோபத்திற்குப் பின்னாலும் பாசமே இருக்கிறது. இந்தச் சம்பவத்தின் வழியாக ராசாத்தி குழந்தை என்ற நிலையைக் கடந்து, தன்னால் நேசிக்கப் படும் ஒன்றைப் பாதுகாக்கும் மன உறுதி யுடையவளாகவும் சித்திரிக்கப்படுகிறாள்.

**தனபாக்கியம் - தாய்மையின் உருவகம்**

தனபாக்கியம் கதையின் மற்றொரு முக்கிய மான பாத்திரமாக விளங்குகிறாள். கணவனை இழந்த நிலையில், மகள் ராசாத்தியைத் தனக்குக் கிடைத்த மிகப்பெரிய உறவாகக் கருதி வாழ்கிறாள். அவளுடைய கணவன் ராசாத்தி நான்கு வயதாக இருக்கும்போது காசநோயால் இறந்துவிட்டான். கணவனின் மறைவுக்குப் பிறகு தனியாக மகளை வளர்க்க வேண்டிய சூழல் தனபாக்கி யத்திற்கு ஏற்பட்டுள்ளது.

**"அவளுக்கு வாய்த்த புருஷன் ராசாத்திக்கு நான்கு வயதாகும்போது, காசநோய் கண்டு செத்துப் போனான்"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 100)

இழப்புக்குப் பிறகு தன்னுடைய வாழ்க்கையை மகளைச் சுற்றியே அமைத்துக் கொள்கிறாள். இதன் மூலம் தனபாக்கியத்தின் தாய்மை வெளிப்படுகிறது.

**தனபாக்கியத்தின் தியாக மனப்பான்மை**

தனபாக்கியம் ஒரு கணவனை இழந்த பெண்ணாக மட்டும் காட்டப்படவில்லை. மகளுக்காகத் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தாயாகச் சித்திரிக்கப் படுகிறாள். **"தனக்குக் கிடைத்த ஒன்றே ஒன்று... அதுதான் தனபாக்கியத்தின் பெரிய ஆசை"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 101)

தனபாக்கியத்திற்கு ராசாத்தி ஒரு மகள் மட்டுமல்ல; கணவனை இழந்த பிறகு வாழ்க்கையில் எஞ்சியிருக்கும் அன்பின் மையமாகவும் இருக்கிறாள். எனவே மகளின் நலனே அவளுடைய வாழ்க்கையின் நோக்கமாகிறது. இதன் மூலம் தாய்மையின் தியாக உணர்வை எழுத்தாளர் நுட்பமாக வெளிப்படுத்துகிறார்.

**அறியாமையிலிருந்து புரிதலுக்கு மாறும் தனபாக்கியம்**

தனபாக்கியத்தின் பாத்திரப்படைப்பில் முக்கிய மான மாற்றம் ஒன்று காணப்படுகிறது. ஆரம்பத்தில் ஓரிதழ்பூவின் மீது ராசாத்தி கொண்டிருக்கும் அளவற்ற பாசத்தை அவள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அதனால் அவள் பூவை வேரோடு பிடுங்கி விடுகிறாள். ஆனால் ராசாத்தியின் எதிர் வினையைப் பார்த்தவுடன் தன்னுடைய தவறை உணர்கிறாள்.

**"தனபாக்கியத்திற்கு ஏன் அப்படி செய்யப் போனோம் என்று தன்னை நொந்து கொண்டாள்"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 101)

**"தன்னுடைய குழந்தை மாதிரி அதுவும் என்று ராசாத்தி உணர்த்திவிட்டாள். அந்தப் பூவை தன் மகளைப் போல் பாதுகாக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்"**

(செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 101)

இது தனபாக்கியத்தின் பாத்திரத்தில் ஏற்படும் முக்கியமான உளவியல் மாற்றமாகும். மகளுடைய உணர்வை அறிந்து கொள்ளும் தாயாக அவள் உயர்கிறாள்.

**மகளின் துயரத்தைத் தாங்கும் தாயாக தனபாக்கியம்**

ஓரிதழ்பூ பிரிந்தபோது ராசாத்தி மிகவும் துயரப்படுகிறாள். அந்தத் துயரத்தைத் தாயான தனபாக்கியம் புரிந்துகொள்கிறாள்.

**"எதுக்குத்தான் கவலப்படறது...' தனபாக்கியம்**

**தன்னைத் தேற்றிக்கொண்டாள்"**

(செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 101)

தாயின் இயல்பு இங்கு நுட்பமாக வெளிப் படுகிறது. தன்னுடைய மகள் துயரப்படுவ தைப் பார்த்து அவளும் துயரப்படுகிறாள். ஆனால் மகளின் முன்னால் தன்னுடைய துயரத்தை வெளிப்படுத்தாமல், அவளைத் தேற்ற முயல்கிறாள். இது தனபாக்கியத்தின் மன உறுதியையும் தாய்மையின் ஆழத்தை யும் காட்டுகிறது.

**வாழ்க்கைச் சுமையைத் தாங்கும் பெண்ணாக தனபாக்கியம்**

தனபாக்கியம் தாயாக மட்டுமல்லாமல், வாழ்க்கையின் பல்வேறு சுமைகளையும் தனியாகச் சுமக்கும் பெண்ணாகவும் காட்டப்படுகிறாள். கணவனை இழந்த பிறகு மகளை வளர்த்தல், வீட்டு வாழ்க்கையை நடத்துதல், இயற்கைச் சூழலால் ஏற்படும் சிரமங்களை எதிர்கொள்ளுதல் ஆகியவற்றை அவள் ஏற்றுக்கொள்கிறாள். வீட்டைச் சுற்றி மழைநீர் தேங்கியபோது,

**தனபாக்கியம் தண்ணீர் தேங்கிய வீட்டைச் சுற்றிச் சுத்தப்படுத்தினாள். புற்களையும், கோரைகளையும் அறுத்துப் போட்டாள். பாசி களைக் கைகளில் சுருட்டி எறிந்தாள்** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 102)

இந்தக் காட்சி தனபாக்கியத்தின் உழைப் பையும் செயல்திறனையும் வெளிப்படுத்து கிறது. அவள் துயரத்தில் மூழ்கி நிற்கும் பெண்ணாக அல்லாமல், வாழ்க்கையை எதிர்கொண்டு செயல்படும் பெண்ணாகச் சித்திரிக்கப்படுகிறாள்.

**ராசாத்தி - தனபாக்கியம் உறவு**

இக்கதையின் பாத்திரப்படைப்பில் ராசாத்தி தனபாக்கியம் உறவு மிக முக்கியமான தாகும். இருவரும் ஒருவரையொருவர் நேசிக் கிறார்கள். ஆனால் அந்த அன்பு ஒரே மாதிரியாக வெளிப்படுவதில்லை. ராசாத்தி யின் அன்பு வெளிப்படையானது. அவள் விரும்பிய பொருளை இழந்தால் உடனடி யாக அழுகிறாள், கோபப்படுகிறாள், தன்னு டைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள். தனபாக்கியத்தின் அன்பு பொறுமையானது. மகளின் துயரத்தைப் பார்த்தாலும் அதைத் தாங்கிக்கொண்டு அவளை ஆறுதல்படுத்து கிறாள். இதனால் இருவரின் பாத்திரங்களும் ஒன்றுக்கொன்று துணையாக அமைகின்றன. ஒருபுறம் குழந்தையின் உணர்ச்சிப் பெருக்கு; மறுபுறம் தாயின் பொறுமை. இவ்விரு நிலை களின் முரண்பாடும் ஒற்றுமையும் கதைக்கு உணர்ச்சி ஆழத்தை அளிக்கின்றன.

**ஓரிதழ்பூ - பாத்திரப்படைப்பின் குறியீடு**

இக்கதையில் ஓரிதழ்பூ ஒரு முக்கியமான குறியீடாகச் செயல்படுகிறது. அது ராசாத்தி யின் வாழ்க்கையில் தோன்றும் அன்பின் உருவகமாகும். ஒரே இதழுடன் மலரும் அந்தப் பூ, ராசாத்தியின் தனிமையையும் பிரதிபலிக்கிறது. தந்தையை இழந்த அவளுக்கு வாழ்க்கையில் கிடைத்த அன்பின் நினைவுகள் குறைவாகிவிட்டன. அந்த நிலையில் ஓரிதழ்பூ அவளுடைய மனத்தில் முழுமையான உலகமாக மாறுகிறது. இதனை,

**"ஒரே இதழ் விரித்து, மறுபடியும் பூத்திருக்கிறது"** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 102) என்ற காட்சி ராசாத்தியின் நம்பிக்கையையும் மகிழ்ச்சியை யும் வெளிப்படுத்துகிறது. ஆனால் அந்தப் பூ பிரிந்து பாசிக்குள் சிக்கிக்கொள்ளும் போது, ராசாத்தியின் மனத்திலும் மீண்டும் வெறுமை ஏற்படுகிறது. இதனால் பூவின் மலர்ச்சி - பிரிவு ஆகியவை ராசாத்தியின் மனநிலை யின் உயர்வு - வீழ்ச்சிகளோடு இணைக்கப்படுகின்றன.

**இழப்பும் வெறுமையும் - ராசாத்தியின் மனப்பாத்திரம்**

ஓரிதழ்பூ அழிந்த பிறகு ராசாத்தியின் மனநிலை மாறுகிறது.

**ராசாத்திக்கு வெறுமை தட்டி விட்டது** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 103) என்ற வரி அவளுடைய மனநிலையை மிகச் சுருக்கமாகவும் ஆழமாகவும் பதிவு செய்கிறது. முன்னதாக மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்த குழந்தை, பூவை இழந்தவு டன் வெறுமையில் தள்ளப்படுகிறாள். இதன் மூலம் ஒரு பொருளின் இழப்பு குழந்தையின் மனத்தில் எவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எழுத்தாளர் காட்டுகிறார். அவளுடைய மனத் தில் பூ தொடர்ந்து வாழ்கிறது. அவள் காணும் கனவுகளிலும் பூக்கள் தோன்றுகின்றன.

**கனவெல்லாம் பூக்களாகவே விரிந்தது** (செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 103)

என்ற வரி, பூவின் நினைவு அவளுடைய ஆழ் மனத்தில் எவ்வளவு வலுவாகப் பதிந்திருக் கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**துயரத்தை கலைப்படுத்தும் ராசாத்தி**

பூவை இழந்த பிறகும் ராசாத்தியின் மனம் பூக்களால் நிரம்புகிறது. சுவரில் கோடுகள் போடும்போது ஒவ்வொரு கோடும் பூவாக மாறுகிறது.

**சுவரில் ஒவ்வொரு கோடு போடும்பொழுது,**

**ஒவ்வொரு பூவாய் உயிர் பெற்று வருகிறது...
வீடே பூக்களின் பாரத்தால் தள்ளாடுகிறது**
(செல்லி மற்றும் பிறகதைகள்: பக்கம் – 103)

இது ராசாத்தியின் கற்பனை வளத்தை வெளிப்படுத்துகிறது. துயரத்தை அழுகையி லேயே முடித்துவிடாமல், தன்னுடைய கற்பனை உலகத்தின் வழியாக மீண்டும் பூக்களை உருவாக்குகிறாள். இவ்வாறு ராசாத்தியின் பாத்திரம் குழந்தை மனம், அன்பு, இழப்பு, நினைவு, கற்பனை ஆகிய பல அடுக்குகளைக் கொண்டதாக அமைகிறது.

**பாத்திரப்படைப்பின் உளவியல் தன்மை**

'ஓரிதழ்பூ' சிறுகதையின் சிறப்புகளில் ஒன்று அதன் உளவியல் சார்ந்த பாத்திரப் படைப்பாகும். ராசாத்தியின் வெளிப்புறச் செயல்களை மட்டும் கூறாமல், அவளுடைய உள்ளத்தில் நிகழும் மாற்றங்களையும் எழுத்தாளர் பதிவு செய்கிறார். மகிழ்ச்சி → அன்பு → பாதுகாப்பு → இழப்பு → துயரம் → வெறுமை → கற்பனை என்ற தொடர்ச்சி யான மனநிலை மாற்றம் ராசாத்தியின் பாத்திர வளர்ச்சியில் காணப்படுகிறது. அதே போல் தனபாக்கியத்தின் பாத்திரத்திலும், அறியாமை → தவறுணர்வு → மகளின் மனத்தைப் புரிந்துகொள்ளுதல் → பாதுகாப்பு → ஆறுதல் → பொறுப்பு என்ற மனவியல் வளர்ச்சி காணப்படுகிறது. இதனால் இரு பாத்திரங்களும் நிலையான பாத்திரங்களாக இல்லாமல், நிகழ்வுகளின் வழியாக மாற்றமடையும் உயிருள்ள பாத்திரங்களாக அமைகின்றன.

**தாய்மையும் மகளின் பாசமும்**

இக்கதையின் அடிப்படை உணர்வாக தாய்மை விளங்குகிறது. தனபாக்கியம் தன் வாழ்க்கையின் மையமாக மகளை வைத்திருக்கிறாள். அதேபோல் ராசாத்தியும் தாயை நேசிக்கிறாள். தந்தையின் பாசத்தை நினைவுகூரும் ராசாத்தி, தாயின் மீதான பாசத்தையும் இழக்கவில்லை. இதன் மூலம் தந்தை - மகள் உறவு, தாய்-மகள் உறவு ஆகிய இரு உறவுகளையும் கதை நுட்பமாக வேறுபடுத்திக் காட்டுகிறது. தந்தையின் அன்பு நினைவாக இருக்கிறது; தாயின் அன்பு நிகழ்கால வாழ்வாக இருக்கிறது. இந்த இரு அன்புகளுக்கு இடையில் ராசாத்தியின் மனம் இயங்குகிறது.

**முடிவுரை**

'ஓரிதழ்பூ' சிறுகதை சிறிய நிகழ்வை மையமாகக் கொண்டு மனித மனத்தின் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தும் சிறுகதையாக அமைந்துள்ளது. இக்கதையின் சிறப்பு அதன் கதைக்கருவில் மட்டுமல்ல; ராசாத்தி மற்றும் தனபாக்கியம் ஆகிய பாத்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ள விதத்திலும் காணப்படுகிறது. ராசாத்தி குழந்தை மனத்தின் தூய்மையையும், அன்பின் தீவிரத்தையும், தந்தையை இழந்த துயரத்தையும், தாயின் மீதான பாசத்தையும், கற்பனை உலகத்தையும் தன்னகத்தே கொண்ட பாத்திரமாக விளங்குகிறாள். ஓரிதழ்பூ அவளுடைய வாழ்க்கையில் தோன்றும் ஒரு மலராக இருந்தாலும், அவளுடைய மனத்தில் அது தந்தையின் நினைவாகவும், அன்பின் அடையாளமாகவும், பாதுகாக்க வேண்டிய உயிராகவும் மாறுகிறது.

தனபாக்கியம் கணவனை இழந்த நிலை யிலும் மகளைத் தன்னுடைய வாழ்க்கையின் மையமாகக் கொண்டு வாழும் தாயாகச் சித்திரிக்கப்படுகிறாள். மகளின் உணர்வைப் புரிந்துகொள்ளும் போது அவளுடைய பாத்திரம் மேலும் உயர்கிறது. அறியாமை யால் செய்த செயலுக்காக வருந்துவதும், மகளின் துயரத்தைத் தாங்கிக்கொள்வதும், வீட்டுச் சூழலைத் தானே சுத்தப்படுத்துவதும் அவளுடைய மன உறுதியையும் பொறுப்பு உணர்வையும் வெளிப்படுத்துகின்றன. இவ்விரு பாத்திரங்களையும் இணைக்கும் பாலமாக அன்பு அமைகிறது. ஓரிதழ்பூ மலர்வதும், பிரிவதும், மறைவதும் ராசாத்தியின் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, அன்பு, இழப்பு, வெறுமை ஆகியவற்றின் குறியீடுகளாக அமைகின்றன. எனவே 'ஓரிதழ்பூ' என்பது ஒரு பூவின் கதை மட்டுமல்ல; அன்பை இழந்த குழந்தையின் மனமும், கணவனை இழந்து மகளைத் தாங்கி நிற்கும் தாயின் வாழ்வும் இணையும் மனித உணர்வின் கதை ஆகும்.

**துணைநூல் பட்டியல்**

1. ஆசு. 2022. செல்லி மற்றும் பிறகதைகள். சென்னை: தமிழ்வெளி பதிப்பகம்.
2. செல்லப்பா, சி. சு. 2007. தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
3. தமிழண்ணல், இரா. 2004. ஆய்வியல் அறிமுகம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
4. வரதராசன், மு. 1965. இலக்கியத் திறன். சென்னை: பாரி நிலையம்.
5. கைலாசபதி, க. 1972. இலக்கியமும் திறனாய்வும். சென்னை: பாட்டாளிகள் வெளியீடு.